மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 22–ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 35/25

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்:முத்துக்குமார் தேதி : 22.06.26
வயது : த/பெ : குருசாமி
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>22.06.26 குறுக்கு விசாரணை</u>

1.என் அப்பா ஓய்வு பெற்ற ராணுவ வீரர் என்றால் சரிதான். என் அப்பா 1964ல் இராணுவத்தில் சேர்ந்து 1992ல் ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். என் அப்பா இராணுவத்தில் ஓய்வு காலம் வரையில் நான் படித்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். என் அப்பாவுக்கு சொந்த ஊர் மணியாச்சி அருகில் உள்ள ஓட்டநத்தம் என்றால் சரிதான். என் அம்மாவுக்கு பாளையங்கோட்டை முருகன் குறிச்சி சொந்த ஊர் என்றால் சரிதான்.

2.என் பெற்றோருக்கு செய்துங்கநல்லூர் கிராமத்தில் பூர்வீக சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். என் அம்மா என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் ஊட்டச்சத்து துறையில் சிறிது காலம் வேலை பார்த்தார். அந்த பணி அரசால் நியமனம் செய்யப்பட்ட பணியா என்றால் ஆம். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.22 19:13:23 +0530

போல் என் அம்மா ஊட்டச்சத்து துறையில் வேலை பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

3.எங்கள் வீட்டில் என் திருமணத்திற்கு முன்பு என் தந்தை மட்டும் தான் வருமானம் ஈட்டக்கூடிய நபர் என்றால் என் அம்மாவிடம் நகைகள் இருந்தன. என் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் 1969 ல் திருமணம் நடந்தது. என் அம்மாவிடம் இருந்ததாக சொல்லும் நகைகள் என் தந்தையின் வருமானத்தில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தாத்தா கொடுத்தது ஆகும். என் தாத்தா என் அம்மாவுக்கு எத்தனை பவுண் நகைகள் போட்டார் என்றால் 15 பவுண் ஆகும். அதற்கு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை தாக்கல் செய்யலாமா என்றால் அந்த காலத்தில் நடந்தது ஆகும்.

4.என் தாத்தா என் அம்மாவுக்கு 15 பவுண் நகை போட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்தினை என் அம்மா பெயரில் கிரையம் வாங்கிய சமயத்தில் என் தந்தை சிம்லாவில் இராணுவத்தில் பணியில் இருந்தார் என்றால் சரிதான். வீடு கட்டிய காலத்திலும் என் அப்பா சிம்லாவில் தான் இருந்தார் என்றால் சரிதான். என் அப்பா சிம்லாவில் பணியில் இருந்து விடுமுறையில் வரமுடியாததால் தான் தபசில் சொத்து என் தாயார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

5.தபசில் சொத்தினை கிரையம் வாங்கவோ அதில் வீடு கட்டவோ என் தாயாருக்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றால் சரியல்ல. என்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.22 19:13:26 +0530

அப்பாவின் வருமானத்தில் தான் தபசில் சொத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா வெளிமாநிலங்களில் பணிபுரிந்து வந்ததால் தபசில் சொத்தில் உள்ள வீட்டிற்கு என் அம்மா பெயரில் வரிவிதிப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. தபசில் சொத்திற்கு என் தாயார் பெயரளவில் தான் உரிமையாளர் என்றால் சரியல்ல.

6.நான் 1ம் பிரதிவாதியின் மூத்த மகன் என்றால் சரிதான். எனக்கு 1996ல் திருமணம் ஆனது. என் மனைவி மும்பையில் பிறந்து மும்பையில் வளர்ந்தவர் என்றால் சரிதான். நான் 1994ல் M.Com படித்து முடித்தேன். அதிலிருந்து 1 ஆண்டு பணியில் சேர்ந்துவிட்டேன் என்றால் ஆம். அஞ்சல் துறையில் பணியில் சேர்ந்துவிட்டேன். பணியில் சேர்ந்த ஒரு சில மாதங்களில் எனக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நான் தனிகுடித்தனம் சென்று விட்டேன் என்றால் வேலை நிமித்தமாக தனிகுடித்தனம் சென்றுவிட்டேன்.

7.திருமணத்திற்கு பிறகு நான் எனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் தனிக்குடும்பமாக வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுடன் என் திருமணத்திற்கு பிறகு தபசில் சொத்தில் நான் கூட்டுக்குடும்பமாக வசிக்கவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தின் சர்வே எண் 886/2 ஆகும். தபசில் சொத்தின் கிழமேல், தென்வடல் அளவு எவ்வளவு என்றால் கிழமேல் 24 அடி, தென்வடல் 31.5 அடி ஆகும். அதன் விஸ்தீரணம் 1.5 செண்ட் ஆகும்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.22 19:13:29 +0530

8.நான் 2 லட்சம் செலவு செய்து மாடி அறை, காம்பவுண்ட்சுவர் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை 2000ம் ஆண்டில் கட்டியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது திருவனந்தபுரத்தில் அஞ்சல் துறையில் வேலை பார்த்து வருகிறேன். நல்ல சம்பளம் பெற்று வசதியாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான்.

9.3ம் பிரதிவாதியின் பராமரிப்பில் தான் 1ம் பிரதிவாதி உள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு நிலையான வேலை கிடையாது என்றால் சரிதான். அடிக்கடி வெளிநாடு சென்று வருவார். என் அப்பாவின் வருமானத்தில் என் தாயார் பெயரில் தபசில் சொத்தினை வாங்கியதால் தான் நீண்ட காலமாக பாகப்பிரிவினை நடவடிக்கை எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கிற்கு முன்பு 1ம் பிரதிவாதியிடம் ரூபாய் 2 லட்சம் கேட்டேன் என்றால் சரியல்ல.

10.என் அப்பா வயோதிகம் காரணமாக 2லட்சம் தர மறுத்ததால் தான் நான் தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா 2ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில் மெண்ட் குறித்து எனக்கு எப்படி தெரியவந்தது என்றால் டிசம்பர் 2024ல் தெரியவந்தது. தபசில் சொத்தில் உள்ள மேல்மாடி அறை எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் உள்ளதா

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.22 19:13:32 +0530

என்றால் அலுவலகத்தில் கடன் வாங்கி நம்பிக்கையின் அடிப்படையில் கட்டினேன்.

11.மேல்மாடி உள்ள அறை கட்டுவதற்கு நான் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. மேல்மாடி அறையை நான் கட்டவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தினை 4 பாகங்களாக பிரித்து அனுபவிக்க முடியாது என்றால் சரிதான். என் பாகத்திற்குரிய தொகையை பிரதிவாதிகள் செலுத்தினால் வாங்கிக்கொள்ள தயாரா என்றால் வாங்கிக்கொள்ள தயாராக உள்ளேன். தபசில் சொத்து தற்போது 2ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

12.தபசில் சொத்தில் எனக்கு கூட்டு அனுபவம் இல்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்து எனது கூட்டு அனுபவத்தில் இருப்பதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் எனக்கு 1/4 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என் அப்பா என் அம்மா பெயரில் பெயரளவில் தான் கிரையம் வாங்கி என் அப்பாவின் அனுபவத்தில் வைத்திருந்ததால் தான் 2ம் பிரதிவாதிக்கு செட்டில் மெண்ட் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அதனால் என் அப்பா 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.22 19:13:35 +0530

13.2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தபோது தபசில் சொத்திற்கான பட்டா என் அப்பா பெயரில் இருந்து என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.06.22 19:13:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.